பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

தரமான சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட்
ஆடைகள்
சின்னஞ்சிறார்களின்
சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

உதயன்

விலை ரூ 2/-

இம்போட்டற்
நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன்
பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ்
வகைகள்
கிறவுண்ஸ்
22, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

கடா: 4 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு மார்கழி மீ 03 உ ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1409 ஐ அவ்வல் பிறை 8 (18 - 12 - 1988) UTHAYAN-A Lively Tamil Daily 6 பக்: 21

நாடு சுதந்திரம் பெற்றபின் உருவாகியுள்ள

மிக மோசமான நிலையில் பதவி விலகுகிறார் ஜே. ஆர்.

நேற்றைய அமைச்சரவையில் அவரே ஒப்புக்கொண்டார்

கொழும்பு, டிசம்பர் 18

நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் உருவாகியுள்ள மிக மோசமான நெருக்கடி காலத்தில், தான் பதவியில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி திரு ஜூனியஸ் றிச்சர்ட் ஜெயவர்த்தனு ஒப்புக்கொண்டார்.

நேற்று அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது. ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனு கலந்து கொள்ளும் கடைசி அமைச்சரவைக்கூட்டமும இதுவே.

இக் கூட்டத்தில் பேசும் போதே ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனு மேற்கண்டவாறு கூறினார்.

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகள் எண்ணப்பட்டு புதிய ஜனாதிபதியின் தெரிவு குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும்போது ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனுவின் பதவிக்காலம் முடிவுறும்.

இந்தசமயம் தான் பதவி விலகிய பின்னர் அரசியலில் இருந்து முற்றாக ஓதுங்கிவிடப்போவதாகவும் அவர் தெரிவித்தார்

எனினும் தாம் தமது தாய் நாட்டை விட்டு வேறு எங்கும் செல்லப் போவதில்லை என்றும் அவர் சொன்னார்.

"எனது தாய்நாட்டை விட எனக்கு வேறு எந்த இடம் சிறந்தது?" என்று வெளிநாட்டுச் செய்தியாளர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில அவர் வினவினார்.

இதற்கிடையில் அவசரகாலச்சட்டம் மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. துரதுசமபந்தமான பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

பிரேரணைக்கு ஆதரவாக 65 எம், பி-களும் எதிராக 2 எம் பிக்களும் வாக்களித்தனர்

நாடாளுமன்றம் இம் மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக உபசபாநாயகர் அறிவித்தார்.

உபசபாநாயகரின் அறிவிப்பு நாடாளுமன்ற சபாநாயகரை அது கட்டுப்படுத்தாது என்றும் அரசதரப்பில் காரணம் காடப்பட்டது. (ஒ-எ)

சுபநேரம்

18-12-1988
மார்கழி 03
ஞாயிற்றுக்கிழமை
சுபநேரம்:
09.23 முதல் 10.53 வரை
ராகுகாலம்:
04.53 முதல் 06.23 வரை
ஆறுமுகநாவலர்
பிறந்த தினம்.

குமாரின் கண்டனத்துக்கு இந்தியத் தூதரகம் பதில்

கொழும்பு, டிச 18

ஜனதிபதி வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன், தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வருவது குறித்து இந்தியத் தூதுவர் திரு. ஜே என் டீக்ஷித் வெளிவிவகாரச் சொல்லடப்படும் கூற்றுக்குக் கண்டனம் தெரிவித்தது. ஜனாதிபதிக்குத் திரு குமார் கடிதம் ஒன்று எழுதியிருந்தார் அல்லவா?

அந்த விவகாரம் குறித்து இந்தியத் தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கை விவரம் வருமாறு:-

திரு. குமார் பொன்னம்பலம் உட்பட சகல இலங்கைப் பிரசைகளும் இலங்கைக்குள் எந்த இடத்துக்கும் இந்தியத் தூதரகத்தினுமதியின்றிச் செல்ல உரிமை பெற்றிருக்கின்றார்கள் என்பது வெளிப்படையானது.

ஆனால் தங்கள் தேர்தல் கூட்டங்களுக்கு இந்திய இராணுவத்தின் பாதுகாப்பை வடபுறத்த இலங்கையில் எந்த அரசியல் கட்சிக்கும் உரிமை கிடையாது.

எனினும் இந்தியாவின் நல்லெண்ணத்தின் கார

(6 ஆம் பக்கம் பார்க்க)

சம்பள அதிகரிப்பு

கொழும்பு, டிச 18

பட்டதாரி ஆசிரியர்களுக்கான சம்பள அதிகரிப்பு நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வரும்.

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது

இந்தவேளை பணம் பொருள் அபிவிருத்திச் சபை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கும் நிட்டத்தையும் அமைச்சரவை நேற்று அங்கீகரித்தது. (உ)

தபால் போதிகள் வந்துசேர்ந்தன!

வடபகுதிக்கான வெளியூர் தபால் பொதிகள் நேற்று வவுனியாவிலிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டன.

இந்தசமயம் வடபகுதியில் இருந்து வெளியூர்களுக்கு அனுப்பவேண்டிய தபால் பொதிகளும் அதே பஸ்ஸில் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (உ-10)

முறைப்பாடுகளை ஏற்பது தற்காலிகமாகநிறுத்தம்

யாழ்ப்பாணம் டிச 18

யாழ். பொலீஸ்பிரிவில் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பிரிவுகளில் சட்டமியாற்றும் பொலீஸார் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதனாலேயே தற்போது முறைப்பாடுகளை ஏற்பது இடைநிறுத்தப்பட்டிருக்கிறது.

மீண்டும் செவ்வாய்க்கிழமை முதல் வழமைபோல் இயங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

அரிசி விலை வீழ்ச்சியுறும்!

கொழும்பு, டிச 18

தனியார் துறையினரால் வெளிநாடுகளில் இருந்து கருவிக்கப்பட்டிருக்கும் 50 ஆயிரம் மெட்ரிக் தொன் புளுங்கல் அரிசி நேற்று முன்தினம் கொழும்புச் சந்தைக்கு வந்து சேர்ந்தது.

இதைத் தொடர்ந்து அரிசி விலையில் வீழ்ச்சி ஏற்படும் என்று உணவுத் திணைக்கள அதிகாரி ஒருவர் கொழும்பில் தெரிவித்தார். (உ-எ)

மாற்றுவழி ஏதும் இல்லாததால்

திட்டமிட்டபடி தேர்தலை நடத்துவது என முடிவு

கொழும்பு டிச 18

ஜனாதிபதிதேர்தலைத் திட்டமிட்டபடி நாளை திங்கட்கிழமை நடத்துவது என்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

அமைச்சரவையின் விசேட கூட்டம் ஜனாதிபதி ஜெயவர்த்தனு தலைமையில் நேற்று நடைபெற்றது.

தென் பகுதியில் வன்செயல்கள் அதிகரித்து வரும் நிலையிலும், நாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்திய பின்னர் ஜனாதிபதி தேர்தலை நடத்தும்படி பல்வேறு அமைப்புக்கள் கோரிக்கைகள் விடுத்து உள்ள நிலையிலும்—

ஜனாதிபதித்தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்துவதா? என்பது பற்றி அமைச்சரவை நேற்று விரிவாக ஆராய்ந்தது

மாற்றுவழி இல்லை என்ற நிலையில் தேர்தலை நடத்துவது என்ற முடிவுக்கு அமைச்சரவை வந்தது. (ஒ-எ)

தேர்தல் அதிகாரிகள் பணிபுரிய மறுப்பு!

கொழும்பு, டிச 18

கேகாலை மாவட்டத்தில் கிரேஷ்ட தேர்தல் அதிகாரிகள் தேர்தல் பணிகளில் ஈடுபட மறுத்துவிட்டனர்.

திக்ரவாதிகளின் பயமுறுக்கலே இதற்குக் காரணம் என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவலகத்துக்குக் கிடைத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

வெலிக்கடை சிறையுடைப்பு: 12 அதிகாரிகள் விசாரணையில்

கொழும்பு, டிச 18

வெலிக்கடைச் சிறை உடைப்புச் சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அத்தியட்சகர் பிரதம ஜெயிலர் உட்பட 12 அதிகாரிகள் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டனர்.

சிறை உடைப்புக்கு உள் ஆதரவு இருந்ததாகக் கூறப்படுகிறது

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்கு ஒன்றில் ஆஜரான எதிரி ஹென்றி பெரேரா நீதிபதியின் அனுமதியுடன் வாகுமூலம் ஒன்றை அளித்தார்

வெலிக்கடை சிறையில் இருந்த ஜே. வி. பியினர். காலுக்கு நிறை விமானப்படையினர் சிலரின் உதவியுடன்தான் தப்பினர் என்று அப்போது அவர் சொன்னார். (உ-எ)

யாழ்நகரின் சில பகுதிகளில் நேற்றிரவு முழுதும் மின்சாரம்

யாழ்ப்பாணம் டிச 18

தற்போது பகுதிபகுதியாக வழங்கப்படும் மின்சாரத்தற்கு மேலதிகமாக யாழ் நகரின் சில பகுதிகளுக்கு நேற்றிரவு முழுவதும் மின்சாரம் வழங்கப்பட்டது.

மின் அடுப்பு உட்பட அதிகளவு மின்சாரத்தை பாவிக்கும் சாதனங்களை பொதுக்கள் உபயோகிப்பதைத் தவிர்த்து- மின்சாரத்தைச் சிக்கனமாகச் செலவிட்டால்- இரவு நேரத்தில் மின்சாரம் வழங்கும் முயற்சியை வேறு சில பகுதிகளுக்கும் விஸ்தரிக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ)

முஸ்லிம் காங்கிரஸ் இரண்டாகப் பிரிந்தது!

கொழும்பு டிச 18

போடிட ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் துவக்கப்பட்டிருக்கிறது.

ஜனாப். அஸ்ரப் தலைமையான காங்கிரஸில் செயற்பாடுகளை இடைநிறுத்தம் செய்யும்படி தொடர்ந் ஆணையாளரை போட்டி முஸ்லிம் காங்கிரஸ் கேட்டுள்ளது.

போட்டி காங்கிரஸின் தலைவர் ஜனாப் ஜுயுயா சாதிக் தெரிவு செய்யப்பட்டார். (உ-எ)

ஊரடங்கில் மாற்றம்

கொழும்பு, டிச 18

கொழும்பு மாநகரம், தெஹிவளை- கல்கிசை மாநகரசபை, கோட்டே கொலன்னாவை, மொரட்டுவை நகரசபைகளை ஆகிய பிரதேசங்களில் நேற்று முதல் ஊரடங்கு சட்டம் இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை அமுல்செய்யப்படுவதாக அரசு அறிவித்தது.

நாட்டின ஏனையபகுதிகளில இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்குச்சட்டம் அமுலாக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. (ஒ-எ)

சார்க நாடுகளின்

தேர்தல் கண்காணிப்புக்குழு யாழ்ப்பாணமும் வரும்

கொழும்பு, டிச 18

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்காக வந்திருக்கும் சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் குழு நான்கு பகுதிகளில் தேர்தல்கள் நடைபெறும் முறையைக் கண்காணிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதிகள் குழு, மூன்று வேட்பாளர்களின் முடிவின்படி யாழ்ப்பாணம், மாத்தறை, அனுராதபுரம், கண்டி ஆகிய பகுதிகளுக்குச் செல்லும்.

குழுவினருக்கான பாதுகாப்பு மற்றும் ஹெலிக்கொப்டர் வசதிகள் போன்றவற்றை அரசு செய்துகொடுத்துள்ளது

சார்க் நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதி வேட்பாளர்களான திரு. ஆர். பிரேமதாச, திருமதி ஸ்ரீமாவோபண்டாரநாயக்கா, ஒலிவியர் குணசேகரா ஆகியோரைச் சந்தித்து உரையாடினர்.

வெளிநாட்டமைச்சர் ஜனாப் ஏ. சி எஸ் ஹமீது, தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டிசில்வா ஆகியோரையும் பிரதிநிதிகள் சந்தித்தனர்.

நேற்று மாலையில் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனுவையும் அவர்கள் சந்திக்க ஏற்பாடாகி இருந்தது.

இருதாக்குதல்சம்பவங்கள்; மூன்று பொலீஸார் பலி!

கொழும்பு டிசம்பர் 18

மாத்தளையில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் இரண்டு பொலீஸார் கொல்லப்பட்டனர்; ஏழு பொலீஸார் காயமடைந்தனர்.

சஹரம்பிலியவல பொலீஸ் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றில் ஒரு பொலீஸ் கான்ஸ்டபிள் கொல்லப்பட்டார்; இருவர் காயமடைந்தனர்.

தாக்குதல்களை ஜே. வி. பி தீவிரவாதிகள் நடத்தினர் என்று சொல்லப்படுகிறது. (ஒ-எ)

யாழ். நகரம் நேற்று வேறுபட்ட நிலையில்!

யாழ்ப்பாணம், டிச 18

யாழ் நகரிலும் சுற்றுப்புறங் ளிலும் நேற்று மக்கள் நடமாட்டமும், வர்த்தகநிலையும் வழமைக்கு வேறுபட்ட நிலையில் காணப்பட்டன

சனிக்கிழமைகளில் விடுமுறையில்லாமல் செயற்படும் வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள் நேற்றுக் காலையில் திறப்பதும் மூடுவதுமாகக் காணப்பட்டன.

சில பகுதிகளில் கடைகள் மூடப்பட்டிருந்தன. சில கடைகள் ஒற்றைக் கதவில் திறந்து வியாபாரங்களை நடத்தின. பலகடை உரிமையாளர்கள் வியாபாரத்தைத் தொடர்ந்து செய்வதா அல்லது கடையை மூடுவதா என்பது குறித்து முடிவு செய்ய முடியாமல் தவறியதையும் காணக் கூடியதாக இருந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஜே. ஆருக்கு பிரேமா பாராட்டு

கொழும்பு, டிச. 18

ஜனாதிபதி ஜெயவர்த்தனுவின் மதிநுட்பத்தை பிரதமர் பிரேமதாஸ நேற்றுப் பாராட்டினார்.

நேற்று நடந்த விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பாராட்டுத்தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

வெற்றி பறிக்கப்பட்டால்

பிலிப்பீன்ஸ் பாணியில் புரட்சி வெடிக்குமாம்!

சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, டிச 18

திங்கள் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி வாய்ப்பு என்னிடமிருந்து பறிக்கப்பட்டால் மணிலா மாதிரிப் புரட்சிதான் இங்கு வெடிக்கும்

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் சுதந்திரக் கட்சி வேட்பாளர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

வடபகுதி வந்தசமயம் திருமதி பண்டாரநாயக்கா ராய்ட்டர் செய்தியாளர் ஹிலு பெயின் சந்தித்துப் பேட்டி கண்டார்.

அப்போது திருமதி பண்டாரநாயக்கா சொன்னதாவது:-

மக்களில் பெரும்பான்மையோர் நான் வெற்றி பெறுவேன் என்கிற நம்பியுள்ளனர்.

இது ஒரு சுதந்திரமான, நியாயமான தேர்தலாக இருக்காது

பல வழிகளில் வாக்காளரைப் பயமுறுத்தி வாக்களிப்பு விகிதத்தைக் குறைக்கவே யு என. பி அரசு முயற்சிகிறது.

நான் தோற்றால் மணிலா நிலைதான் இங்கு தோன்றும்; கலவரங்களினால்தான் விதிகளில் காணமுடியும்.

1986 இல் இரத்தம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையினரை ஈர்த்து வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விநாயகர், பாலமுருகன், நடராசா, துர்க்கை அம்மன் உற்சவ பஞ்சலோக விக்கிரகம் விற்பனைக்குண்டு. பிள்ளையார் 259, சாங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8238)

பூரண விளைந்திறன் உடைய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு பிள்ளையார் 259, சாங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (8240)

பதிவு செய்யப்படாத Honda Racoon மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு 106, கல்மகள் வீதி, கல்லியங்காடு. (8242)

அழகிய கலப்பற்ற உயரின பொமரேனியன் வெள்ளை, பிறவுன் நிற ஆண் பெண் பெரிய, சிறிய நாய் குட்டிகள் விற்பனைக்குண்டு. ஆ. காசதுரை செகராம். டச்சு வீதி, சங்கிலியன் தோப்பு. (8225)

பன்றாம் (Bantam) கோழிகுஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. இ. பஞ்சாட்சரி, வசந்தம் இணுவில் ரோட், மானிப்பாய். (8243)

எமிடம் பல சட்டப் புத்தகங்கள் விற்பனைக்கு இருக்கின்றன. உடன் நேரில் வந்து சந்திக்கவும். சி. சிதம்பரநாதன், அரசடி ஒழுங்கை தாவடி வடக்கு கொக்குவில். (8303)

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

நிரமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரசு தவுவியகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/887)

இறைச்சிக்கோழி விற்பனை

புரொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு சலுவு கொடுக்கப்படும். தொடர்பு: புகழ் ஸ்ரோர்ஸ், K K S. Road, கல்லுண்டாய். (8236)

புரொயிலர் இறைச்சிக் கோழிகள் சேவற்கோழிகள், கல்ட் (Culled) பேட்டுக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகவும் சலுகை விலையில் பெற்றுக்கொள்ளலாம். கூடிய நிறையுடைய புரொயிலர் கோழிகள் சில்லறைக்கு கிலோ 35/- பம் ஹவுஸ், கோட் ரோட், மல்லாகம். (8237)

இறைச்சிக் கோழி

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்றர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

புரொயிலர் கோழி, சேவல், விருத்து சேவல் அடைவைக்கும் முட்டை, கோழித்தீன் வகைகளுக்கு உண்டு. சற்குணராஜா அன் பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில். (8245)

தேவை

தமிழ், ஆங்கில கொம்போஸிங் நன்கு தெரிந்த யுவதிகளும், பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. றாபில், பிளாஸ்ரிக் ஒலியவேலை, பழகுவதற்கு யுவதிகள், இளைஞர்கள் தேவை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் திறமைக்கேற்றபடி சம்பளம் உயர்த்திக்கொடுக்கப்படும். தரன் ஸ்ரூடியோ, 9 B, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். போன்: 23858. (8222)

மணமகள் தேவை

லண்டனில் Accounts Clerk பகவியில் உள்ள (1 C M A - Part 2) தரமுடைய 32 வயதுடைய யாழ்பாண கத்தோலிக்க வேளாள மணமகனுக்கு லண்டனில் உள்ள மணமகள் தேவை. இந்து மதத்தவரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல 12 உதயன், யாழ்ப்பாணம். (8311)

வாடகைக்குத் தேவை

கச்சேரி சுற்றுவட்டவில் சென் ஜோன்ஸ், டொன் பொஸ்கோ பாடசாலைக்கு சமீபமாக 5 பேர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். S கந்தசாமி, 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (8307)

வைத்தீஸ்வரா பாடசாலையை சுற்றியுள்ள பகுதிகளில் 4 பேர்களைக் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். P சக்தி நாதன், 146 நவீன சந்தை, யாழ்ப்பாணம். (8308)

தேவை

11 ஆம் ஆண்டு மாணவிக்கு தனிப்பட்ட பாடமையில் (Private Tuition) கணிதம், விஞ்ஞானம், தமிழ் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியர் தேவை. யாழ் நகரில் வசிக்கும் ஓய்வு பெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது விண்ணப்பிக்கவும் 11 C/o உதயன், யாழ்ப்பாணம். (8306)

விருப்பங்கள்

Spoken English

புதிய பிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர்கள் வசதிக்காக நேரம் பகல் 10.30 - 12 30 திங்கள்/புதன் நாட்களில். ஆரம்பம் 19-12-88 S B Iyar 12, வைமன வீதி நல்லூர். (8147)

புதிய வகுப்புக்கள்

ஆண்டு 4 5 6 7, 8 9. A/L 90, 89 வகுப்புக்கள் 16/12 வெள்ளி பி ப. 3 மணி முதல் ஆரம்பமாகிறது. மொடேன் எடியுகேசன் சென்றர், கராவெட்டி. (8219

ஆண்டு 10 11 16/ 12 வெளி பி ப 3 மணி முதல் ஆரம்பமாகின்றது. Science Centre. Karaveddy (8220)

இசைப்பயிற்சி வகுப்புக்கள்

வட்டுக்கோட்டையில் உள்ள இசைப்பிரியர்களின் வேண்டுகோளுக்கிணங்க கிற்ஸ்டர், ஒன், ஆர்மோனியம் வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், வாய்ப்பாட்டு வகுப்புக்கள் மூளாய் மருத்துவக் கல்லூரிக்கு முன்பாக ஆரம்பிக்கப்படுகிறது. டயில விரும்புவோர் 15- 01- 89க்கு முன் தொடர்பு கொள்ளவும். சி துரைராசா, 'சற்குணராசம்' ஆஸ் பத்திரி வீதி. மூளாய், சுழிபுரம். (8102)

சேவை

தடைக்கு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்தவும் நடுங்கள்: Fudo Enterprises, 39/17, மிலசார நிலையவீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் (Shabra-Samy & Co அநுகாமையில்) C/945)

I. E. T.
கல்வி நிலையம்

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடாத்தப்படும் உகுவி ஆங்கில ஆசிரியர் TOEFL தேர்வுப் பரீட்சைக்கான மீட்டல் பயிற்சி 30 மணித்தியாலங்கள் ரூபா 500/- தனிப்பட்ட பயிற்சி (Individual), வீடுகளில் பயிற்சி (House Visit) 11B, Stanley Road, Jaffna (விவேகானந்தா அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி) (8048)

புத்தகம்

க. பொ. த. (உ. த) பிரயோக கணித காவியும் அதன் பிரயோகங்களும் ஆகிய படிமுறைப் பயிற்சிநூல் வெளிவந்து விட்டது பல புதிய வினாக்கள் உட்பட 125 வினாக்களைக் கொண்டதிய வெளியீடு இதுவாகும் யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு மட்டக்களப்பு ஆகிய நகரங்களிற் கிடைக்கும். ஆசிரியர்:- சி துரையப்பா, St John's College Jaffna. (8213)

தவறிவிட்டது

கதிரவேலு வீரசிங்கம் ஆகிய எனது மோட்டார் அனுமதிப் பத்திரம் (லைசன்ஸ்) No 016396. (22- 6 84). தொற்றை. சாதகக் குறிப்பு ஆகியன செல்வ முச்சு வீதியிலுள்ள மூர்த்தி டிவிபென்சரியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து இந்த பென்டிஸ்சரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (8312)

ஜோதிடம்

விலை ரூபா 3/50 (சனி மாற்றம்):- தமிழர்களின் மேடராசிக்கு நன்மைகளும், தென்னிலங்கையின் கும்பராசிக்குச் சனி பகை. ராகு கேதுக்களின் பெட்டி பார்வைகளால் தேர்தலின் இரத்தக்களரி வேளையும்; ஜே. ஆர் - ராஜீவ் தலைவர்களின் சிங்ராசிக்குக் கண்டகத்திய வியாழனாலும், கண்டகப்பட்ட மாகு கேதுக்களாலும் இரு நாட்டு அரசுகளின் வீழ்ச்சிகளையும் எற்படுத்தும். ஆதமஜோதி பதிப்பாசிரியை:- சத்திய தாஸன் B A., பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம் (8123)

கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்பு சேவற்குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும் 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்றர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

Sale

2 Galss Cabinets 1woodenCabinet. Iron, Bed with Mattress. 1 Large Book self 4 Wooden Chairs, 1 oval table, 1 Stand. 1Kitchen almyrah. 1 Study Table For Immediate Sale. No.7 Somasundram Avenure Chundikuli (8241)

வாடகைக்கு உண்டு

பொற்பதி ரோட்டில் பேக்கரி ஒன்று வாடகைக்குஉண்டு தொடர்பு கொள்ளவும் பொற்பதி ரோட், கலைவாணி லேன், கொக்குவில். (8239)

வீடு கட்டுவதற்கு மானியம் வழங்கப்பட்டோர் பட்டியல்

யாழ்ப்பாணம், டிச. 18 செயன சரண 10 கோடி ரூபா வீடமைப்பு மானிய திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கு மானியம் வழங்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பங்களின் பெயர்ப் பட்டியல்கள் மாநகர சபையிலும், எல்லச் சபைகளிலும் நிலையங்களிலும் தேசிய வீடமைப்பு அதிகாரசபை அலுவலகத்திலும் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிரான ஆட்சேபனைகளை பொதுமக்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் மாநகர ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள்

ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும்

யாழ்ப்பாணம், டிச. 18 இரண்டு வருட சம்பள முற்பணம் தவிர்ந்த ஏனைய கடன்களுக்கு விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கு இந்த வருட இறுதிக்குள் அனைத்துக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்

இவ்வாறு யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தம்மிடம் கூறியதாக தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. மகாசிவம் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த வருடமும் இந்த வருடமும் இரண்டு வருட சம்பள முற்பணம் தவிர்ந்த மூன்று மாத சம்பள முற்பணக்கடன், பண்டிகை முற்பணம் போன்றவற்றிற்கு பலர் விண்ணப்பித்துள்ளார்கள்.

இத்தகைய கடன்களுக்கு விண்ணப்பித்தவர்களில் சிலருக்கு அத்தாட்சி, உறுதி என்பன போதாமையால் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இவர்களுக்கும் இவ்வருடம் விண்ணப்பித்தவர்களுக்கும் வருட முடிவுக்குள் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்றும் கல்விப் பணிப்பாளர் சொன்னதாக திரு மகாசிவம் கூறினார் (ஒ-5)

மல்லை மகாவித்தியாலய அபிவிருத்திச் சபை

முல்லைத்தீவு, டிச. 18 முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. வே சுப்பிரமணியம் (முல்லைமணி) தலைமையில் நடைபெற்றது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்:- முல்லைமணி திரு. வே சுப்பிரமணியம் (அதிபர்) செயலாளர்:- திரு சு பொன்னுசாமி, பொருளாளர்:- திரு ம அ. ஜெநாதன்

மற்றும் 18 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் (ச-92)

இந்த ஆண்டுக்கான வீடமைப்புப் போட்டி

ஓட்டுசுட்டான், டிச. 18 முல்லைத்தீவு மாவட்டத்தில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை நடத்தும் 1988 89 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு போட்டியில் பங்கு கொள்ள விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப் போட்டியில் பங்கு கொள்ளும் ஒருவர் கிராமோதய பிரதேச மாவட்ட, தேசிய மட்டத்திலும் போட்டியிடச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 31-12-1988 ஆகும் (ச-123)

வாக்களிக்க 10மைல் படகில் செல்ல வேண்டும்

அனலைதீவு டிச. 18 ஜனாதிபதி தேர்தலுக்கு அனலைதீவில் வாக்களிப்பு நிலையம் அமைக்கப்படவில்லை 10 மைல் ஊடாக அப்பாலுள்ள ஊர்காவற்றுறைக்கு படகில் வந்தே அவர்கள் வாக்களிக்க வேண்டும்.

முல்லை தேர்தலில் இத்தீவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படிருந்தன (இ- 18)

வைரவிழா

சுழிபுரம், டிச 18 பண்ணாகம் பண்டிதர் அ ஆறுமுகத்தின் வைரவிழாவை சிறப்பாகக் கொண்டாட எற்பாடுகள் நடைபெறுகின்றன. பண்டிதரது மாணவர்களும் நண்பர்களும் விழாச்சபை ஒன்றை அமைத்து விழா மலர் வெளியிட ஏற்பாடு செய்து வருகின்றனர். (ச-28)

கொள்ளைபோன பொருள்கள் மீட்பு; உரியவர்கள் பெறலாம்

குருநகர், டிச

ஒரு லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட கொள்ளைப் பொருள்கள் தாராகுளம், ஆரியகுளம், சந்நிதிமடம் கிட்டங்கித் தெருவை சந்த மாளிகை, பழைய பூங்கா வீதிப் பகுதி வீடுகளைப் பற்றப்பட்டுள்ளன.

டி. வி. டெக், டேப் றெக்கோடர்கள், கதிரைகள், சைக்கிள்கள், மின் விசிறிகள், கொம்பாஸ், மூலவைபர்கள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள் என்பனவே மீட்கப்பட்டவை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதிப்படையினரின் அனுசரணையுடன் குருநகர் புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கமும் வேறு சில குழுக்களும் சேர்ந்து ஐந்துக்கும் மேற்பட்ட கொள்ளைக் கோஷ்டியிடம் இருந்து இவற்றை மீட்டுள்ளதாகத்தெரிய வருகிறது.

உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்களுடன் குருநகர், புதிய சந்தை வர்த்தகர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ 51)

பயிரின விதைகள் தட்டுப்பாட்டை நீக்க இளைஞர் உழைக்க வேண்டும்

சுழிபுரம், டிச 18 "விவசாயத் தேவைக்களம் தரும் விதைகள் மிகக் குறைவாக உள்ளதால் விதைகளை பகிர்ந்து செய்வது கஷ்டமாகவுளது. விதைகள் குறைவாக இருந்தாலும் அவற்றைப் பெருகும் செய்வது இளம் விவசாயிகள் சமூகங்களின் கடமை ஆகும். நல்லின விதைகள் யாவும் உரிய காலத்தில் பயிரிடப்பட்டால் நிச்சயம் நல்ல பலனைக் கொடுக்கும். விவசாயிகளின் தேவைகளை அறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அதிக பயனைப் பெற்றுக்கொள்ள நல்வாய்ப்புக்கள் நிறையவுள்ளன."

பண்ணாகம் இளம் விவசாயிகள் கழக விசேஷ பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய விவசாயப் போதனாசிரியர் திரு. தி. சுமுகசுந்தரம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்ணாகம் கிராம அபிவிருத்தச் சங்க மண்டபத்தில் கழகத்தலைவர் செல்லன் அருணாகரன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பண்டிதர் ப. இராசகுரு பேசுகையில் "காலத்தை பொன் செய்ய வேண்டும். நிலத்தையும் நீரையும் நன்கு பயன்படுத்த வேண்டும். இன்று எரிபொருள், மின்சாரம் யாவற்றைக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. இதனை எவ்வாறு நிறைவு செய்யலாம் என்பதை இளம் விவசாயக் கழகம், அதிகாரிகளுடன் கலந்து ஆவன செய்ய முன்வர வேண்டும்" என்றார்.

திருமதி கி. சிவபாக்கியநாதன் பேசுகையில், "கிராம விவசாயிகளின் தேவைகள் பலவற்றை இளம் விவசாயிகள் கழகத்தினரால் நிறைவு செய்ய முடியும். விதைகள், நாற்றுக்கள், மருந்து வகைகள், ஆலோசனைகள் மற்றும் உதவிகளை விவசாயப் பகுதியினர் வழங்குகின்றனர். இவற்றைப் பெறும் கமக்காரர்கள் விவசாய உத்தியோகத்தரின் ஆலோசனையின்படி நடப்பார்களானால் நல்ல பயனைப் பெறுகிக்கொள்ளலாம்" என்றார். (சி 28)

மக்கள் கடைக்கு மகத்தான ஆதரவு

சுழிபுரம், டிச 18 சுழிபுரம் காட்டுப்புலத்தில் புதிதாகத்திறக்கப்பட்ட மக்கள் கடைக்கு அப்பகுதி மக்களின் ஆதரவு பல வகையிலும் அதிகரித்து வருகின்றது.

நியாயமான விலைகளும் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதால் மக்கள் இக்கடையைப் பெரிதும் ஆதரிக்கின்றனர்.

இக்கடை சுழிபுரம் கூகாதார அபிவிருத்திக் கழகத்தொண்டர்களால் நடத்தப்படுகின்றது. (ச-28)

JAFFNA ENGLISH ACADEMY

(A LUX IN TENEBRIS)

✶ G C E. Ordinary Level English Language:
Mondays & Wednesday — 5 to 6 30 p m.

✶ Spoken English (Higher - above 14 years)
Tuesdays & Fridays — 4 00 to 5 00 p.m.
Duration: 3 Months

✶ Spoken English (Middle - between 9-14 years)
Mondays & Wednesday — 4 00 to 5 00 p.m.
Duration: 3 Months

✶ Elocution: (Stages 1 & 2)
Thursdays: 3 30 — 4 30 p m.
Sundays: 10 30 — 11-30 a.m.

✶ Flocution: (Stages 3 & 4)
Thursday: 4 30 — 5 30 p m.
Saturdays: 10 30 — 11 30 a m.
Duration: 3 Months

✶ Class - Work:
Years 8 & 9
Saturdays & Sundays: 9-00 — 10-00 a.m.
Years 6 & 7
Saturdays & Sundays: 8-00 — 9 00 a m.

Lectures:- Mrs. E. R. Mather

Mrs. E. R. Mather has returned from U. K.

9, Rakka Lane,
Chundikuli,
JAFFNA.

(C-946)

எமது நேற்றைய
புதிய வெளியீடு
உஷா சினிமா
✶ பிரபு ✶ ரகுவரன்
✶ அமலா
நடித்த
- கலியுகம் -
(8316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரைவில் வெளிவருகிறது!

Work Out
PHYSICS
'A' Level

ஆசிரியர்:
R. சத்தியசீலன்

21, மணல்தரை லேன், கந்தர்மடம் (யாழ்)
B M.C முன்லேன், யாழ்ப்பாணம்.
(C/948)

Diploma in Computer Programming
(Basic Language)

சனி, ஞாயிறு வகுப்புக்கள்

ஆரம்பம்: 24 - 12 - 88

[சனி காலை 10.00 மணி]

பயிற்சிக்காலம் 3 மாதங்கள்

கட்டணம்: மாதம் ரூபா 300/-

CIMA, IDPM AAT IAB வகுப்புகளும் ஆரம்பமாகி நடைபெறுகின்றன இன்னும் சிலதினங்களுக்கு மாத்திரம் இவ்வகுப்புகளிலும் மாணவர்கள் சேர்த்துகொள்ளப்படுவார்கள்.

தகைமையும், திறமையும், ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த போதனையில் சாதனை புரியும் விரிவுரையாளர்களைக் கொண்ட கணக்கியல் கொம்பியூட்டர் துறைகளில் தனித்துவம் வாய்ந்த ஒரே கல்வி நிறுவனம்

HARVARD INSTITUTE
Successors of
CANTABIA INSTITUTE
(Sister Organisation of Oxonia Colombo)
&
(Ploners in Computer Eduction)

NO 21, MAIN STREET, JAFFNA.
(2ஆம் குறுக்குத்தெரு வழியாக வரவேண்டும்
(C 936)

ஜெய்பூர் செயற்கைக் கால்

யாழ்ப்பாணம், டிச. 18

ஒரு கால் தவிப்பட்ட வர்களும், கால் அங்க வீனர்களும் ஜெய்பூர் செயற்கைக் கால் நிறுவனத்தின் பெயரைக் கூறி செயற்கைக்கால்பொருத்துவதற்கு பொது மக்களிடமிருந்து பணம் சேர்க்கின்றனர் என்று கூறப்படுகிறது.

பொது மக்கள் செயற்கைக்கால் பொருத்துவதற்கு அன்பளிப்பாக பணம் கொடுக்க விரும்பினால் அதை ஜெய்ப்பூர் செயற்கைகால் ஸ்தாபனத்துக்கு நேரடியாகக் கொடுத்துதவும்படி இவ் ஸ்தானத்தின் தலைவி ரி. குணநாயகம் அறிவித்துள்ளார். (ச)

நான்காவது
பிறந்ததின வாழ்த்து

செல்வி
✶ சங்கீர்த்தா சிவலோகநாதன் ✶

அன்னசத்திர லேன், கந்தர்மடத்தைச் சேர்ந்த சிவலோகநாதன்- விக்னேஸ்வரி அவர்களின் செல்வப் புதல்வி சங்கீர்த்தா இன்று (18-12-1988) தனது நான்காவது பிறந்த நன்னாளை மிகவும் விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடுகிறாள்.

இவரை அப்பா, அம்மா, அம்மாத்தா, அம்மம்மா, சின்னம்மா சின்ன அத்தை, றமேஸ்ராஜ் பச்சான், அன்புச்சித்தி, இளிநொச்சி பூட்டி ஆகியோர் கணவன் அருளாலே பல்கலைகளும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்
(C/931)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

விஞ்ஞானபீடப் பரீட்சைகள்
1988

1988ஆம் ஆண்டிற்குரிய இரண்டாவது அரையாண்டுப் பரீட்சை 30-01-1989 இல் நடைபெற உள்ளது.

பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 06-01-1989 ற்கு முன்பாக சிரேஷ்ட உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலதிக விபரங்களை சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடமிருந்து நேரடியாகவோ அல்லது சுய விலாசமிடப்பட்டதும் முத்திரை ஒட்டப்பட்டதுமான 23 செ.மீ × 10 செ.மீ அளவுடைய கடிதவுறையை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

பதில் பதிவாளர்.
(C/947)

மணி விழாக்காணும்
தொழில் அதிபர் அவர்களே!
பொது வாழ்வில்
வைர விழா
கண்டு புதிய சாதனை படைத்திட்டவரே!!

இருண்டு கிடக்கும் எம் வாழ்விற்கு
ஒளி ஏற்றிட வருக!
வளம் இழந்த எம் வாழ்விற்கு
வற்றாத ஜீவநதியாக வாழ்வு தருக!

உங்கள் பாதையில் தூவிட
மலர்களுடன் காத்து நிற்கும்

- ஊழியர்கள்,
ஞானம்ஸ் ஸ்ருடியோ
ஹோட்டல் ஞானம்ஸ்

(C 507)

★ நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு ★

கேக்
தயாரிப்புக்குத் தேவையான
இறக்குமதி செய்யப்பட்ட

- ✶ சுல்தானாஸ் (Four Crown Australian)
- ✶ கரண்ஸ் (Australian)
- ✶ வைற் றேஸன்ஸ் (with Seed & Seedless)
- ✶ ஈச்சம்பழம்-Dates (white) ★

இலங்கையில் மிகவும்
முன்னோடிகளால் தயாரிக்கப்பட்ட
சார்ல்ஸ் தயாரிப்புக்கள்
(Charles Products)

- ✶ செரிஸ், கண்டிபில் ஜிஞ்சர், சவ்சவ்
- ✶ புள்தேசி, ஜாம் வகைகள்
- ✶ ரவ்வை, பேக்கிங் பவுடர்
- ✶ ஐசிங் சுகர், சொவ்ர சுகர்
- ✶ கஜு, கொக்கோ பவுடர்
- ✶ ஒஸ்ரேலியா மாஜரின்
- ✶ அஸ்ரா மாஜரின்
- ✶ சனி சவுத் பட்டர்

இறக்குமதி செய்யப்பட்டதும்
உள்ளூர்த் தயாரிப்பும்

- ✶ கேக் எசன்ஸ்
- ✶ கலரிங் வகைகள்

குளிர்பானத்திற்கேற்ற
இறக்குமதி செய்யப்பட்டதும்
உள்ளூர்த் தயாரிப்பும்

- ✶ கோடியல் ✶ எமல்சன் வகைகள்
- ✶ கேக் அலங்காரப் பொருட்கள் (Cake Decoration)
- ✶ நத்தார் கேக் அலங்காரப் பொருட்கள்,
- ✶ நத்தார் புதுவருட அன்பளிப்புப் பொருட்கள்
- ✶ நத்தார் பொதிப் பேப்பர் ✶

ஆகிய பொருட்களை ஒரே இடத்தில்
மிக மலிவாகவும் தரத்தில் சிறந்ததுமாகப் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள் ✶✶✶✶ **பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்** ✶✶✶✶

223, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 24823

தலைமை அலுவலகம்:
18/1, டாம் வீதி,
கொழும்பு - 12
தொலைபேசி: 26235 & 549269

(C-929)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவிழாக்காணும் திரு. ஞானம் அவர்களை

யாழ் மறைவட்டார முதல்வர்
எஸ். எச். ஜெபநேசன் அடிகளார்
வாழ்த்துகிறார்

"ஏனெனில் வல்லமை மிக்கவர்
எனக்கரும் செயல்பல புரிகிறார்"

திரு. குலசப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் அறுபதாவது வயது நிறைவை யொட்டி ஆலிவழக்கில் நான் மிக மன நிறைவும் மன மகிழ்வும் அடைகின்றேன். அறுபதாண்டு காலம் இவரை நன்கு அறிவேன். இதில் எனக்கு ஒருவகையான மதிப்பும் அன்பும் என்னையறியாமலே ஏற்பட்டு விட்டது.

மேலே குறிப்பிட்ட அன்னை மரியாளின் நன்றிப்பாடலின் இரண்டு அடிகளிலும், இறைவன் இவர் வாழ்வையில் இருகுகப் புரிந்துள்ள ஆசிகளை 'காணலாம் ஞானம்' 'ஞானம்' என் எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் எப்போதும் எல்லோருடனும் இனமுகத்துடனும், இனிய சொல்லுடனும், அடக்கமான அமைதியான சுபாவத்துடனும் இதமாகப் பழகுவார்.

கண்ணியமான கடும் உழைப்பால் உயர்ந்தவர்; உள்ளத்தாலும் உயர்ந்தவர். குணத்தால் சிறந்தவர். பண்பால் மிகுந்தவர். அன்பால் அணைப்பவர். பாசத்தால் பெரியவர். அநுபவத்தால் மிக்கவர். உபசரிப்பால் ஒங்குபனை போன்றவர்.

05-05-1954 இல் புகைப்பட நிலையத்தைச் சிறிய அளவில் ஆரம்பித்து தொழில் சிறப்பினாலும் சுயமுயற்சியினாலும், பதிநுட்பத்தினாலும் 12 07-1967 இல் நவீன முறையில் புதிய ஒளிப்பட நிலையத்தை ஆரம்பித்தார்.

இயல் சனிய போகினாலும், நேர்மை வாய்மைத்திறத்தாலும் எல்லோர் நெஞ்சங்களிலும் வாழ்ந்து வளர்ந்து உயர்ந்து 10-08 1983 இல் யாழ் நகருக்கே பெருமை தரக்கூடிய "ஹெரிடேஜ் ஞானம்ஸ்" என்னும் உணவகத்தையும் விடுதியையும் அமைத்த பெருமை திரு. ஞானப்பிரகாசம் அவர்களுக்குண்டு.

தொழிற்களத்தில் உயர்ந்த பொழுதிலும், சத்தோலிக்க திருச்சபையின் பெரு நிலையினர் சமூகங்களிலும் வகித்தவும் கொடுத்து, என்னுளான சேவை செய்தும், சமூகசேவையில் பங்கெடுத்துப்பணியாற்றியும் வருகிறார் 'முயற்சி உடையார் இழச்சி அடையார்' என்பதற்கு நலலதொரு எடுத்துக் காட்டாக விளங்குகிறார் திரு. ஞானம் அவர்கள்.

நடு பயன்பட வாழ்ந்துவரும் திரு. ஞானப்பிரகாசம் அவர்கள் தையிடுங் கருமங்களில் சித்திபெற்று இறைமகன் கிறிஸ்துவினதும், அன்னை மரியாளினதும் நிறை அருள் பெற்று நீடூழி வாழ இறைவனை இறைஞ்சி வாழ்த்துகின்றேன்.

(8314)

ஓராண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்:- 22.08.1898

மறைவு:- 31.11.1987

உரும்பராய் தெற்கு
திரு. ம. பொன்னம்பலம் அவர்கள்

எங்கள் அன்புத் தெய்வமே!

தாங்கள் சிவகதிசேர்ந்த ஓராண்டு ஓடி மறைந்து விட்டது. தங்களிடமிருந்து கொண்ட பக்தியை நாம் என்றும் மறவோம்.

தங்கள் ஆத்மசாந்தியின் பொருட்டு நாம் அனைவரும் இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

உரும்பராய் தெற்கு, உரும்பராய். (8100)

அன்புகளாத மனைவி, பக்கள், மருமக்கள், பேரர்கள், உறவினர்கள்.

உயர் கல்விக்கு

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களே அடித்தளம் போன்றவர்கள்

மானிப்பாய், டிச 18

மானவ உலகு உயர் கல்வி பெறுவதற்கு ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களே அடித்தளமாக அமைகின்றனர்.

ஆரம்ப வகுப்பு ஆசிரியராக, உப அதிபராகப் பல காலம் ஒரு ஆசிரியர் சேவையாற்றுவதுபோற்றப்பட வேண்டியதே.

உடுவில் முருகமூர்த்தி விக்கியாசாலையின் உப அதிபர் செல்விபுனிதவதி கந்தையா ஓய்வுபெற்றதையொட்டி ஆசிரியர்களாலும், மாணவர்களாலும் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் பேசியபோது மேற்படி பாடசாலை அதிபர் திரு. யோகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. வை. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆசிரியர் திரு. ப ஆனந்தமகேஸ்வரன் பேசுகையில் "ஆசிரியருக்குரிய குணங்கள் சிலருக்குப் பிறப்பிலேயே அமைந்து விடுகின்றன. சிறுபிள்ளைகளுடன்

திருட்டு

நெடுந்தீவு டிச 18

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒப்படைப் பயிற்சிநெறிக்காக மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான ஆடைகள் திருடப்பட்டன.

கூரையைப் பிரித்துப் பாடசாலையின் உள்ளே புகுந்திருடர்கள் இவற்றைத் திருடிச்சென்றுள்ளனர். (ச-111)

பழைய நகரிலிருந்து பஸ் சேவை

பருத்தித்துறை, டிச. 18

பருத்தித்துறை பஸ் நிலையம் மீண்டும் பருத்தித்துறை பழைய நகருக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதுவரை பருத்தித்துறை டிப்போவுக்கு முன்னால் மருதடி வைரவர் கோவிலுக்கு அருகாமையிலிருந்த பஸ்கள் புறப்பட்டன

புதிய ஒழுங்கின்படி வடபிராந்திய பஸ் போக்குவரத்துச் சபைக்குரிய பஸ்கள் தற்போது பருத்தித்துறை பழைய நகரிலேயே தரித்துப் போக்குவரத்துக்களை ஆரம்பிக்கின்றன.

இதனை அடுத்து தனியார் மினிபஸ் சேவைகளும் பருத்தித்துறை பழைய நகருக்கு மாற்றப்படுகின்றன.

(ச – 118)

சாக்கு கேள்விக்கூறு

துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 6 00 வெற்றுச்சாக்குகள் இனாரியாக விற்பனைக்குண்டு. இதற்கான கேள்விக்கூறு விண்ணப்பங்களை தலைமைக் காரியாலயத்தில் ரூபா 100/- வைப்புப் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும் சாக்குகளை தலைமைக் காரியாலயத்தில் காரியாலய நேரத்தில் பார்வையிடலாம். கேள்விக்கூறு விண்ணப்பங்களை பொது முகாமையாளர், துணுக்காய் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய் என்னும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் 28 12 88 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

பொதுமுகாமையாளர்

12 12 88 (C 944)

ஓராண்டு கண்ணீர் அஞ்சலி

தாயார்
திருமதி இளையதம்பி சாந்தநாயகி

அன்னை மடியில்:- 1907 05 03
ஆண்டவன் அடியில்:- 1987-12-29

தனயன்
திரு. இளையதம்பி யோகேஸ்வரன்
B. Sc (Dip. in Ed)
(In Service Adviser)

அன்னை மடியில்:- 1936-10-20
ஆண்டவன் அடியில்:- 1987-11-11

திதி:- 1988-12-18

நோயாலே மனம் வாடி நோய் தீர்க்கும் சாலையிலே
நோயுற்றிருந்தபோது மனம் நொந்து ஓடி வந்து
தாயாரே கடவுளென்று தயையுமே பார்த்து வர
தாரகன் போல் வழியிலேயே கொன்றொழித்து விட்டானே!
மைந்தனும் சென்றவுடன் மருந்துண்டு நோய் தீர்ந்து
மனையிலே வாழ்ந்தபோது உம்முயிரும் சென்றதுவே
சகோதரனே நாங்களினி எங்கு செல்வோம் உலகப்பெற?
அவர் பின்னால் சென்றீரே அன்னையே உமை மறவோம்.

தாயாரையும், சகோதரனையும், இழந்து ஆறாத் துயருறும்.
மக்கள், சகோதரர்கள்:
இ. சந்திரமௌலீசன்,
இ. கங்காமௌலீசன்,
ஸ்ரீ நகுலேஸ்வரி.

சரசாலைச் சந்தி,
சரசாலை.
சாவகச்சேரி. (8258)

கம்பியூட்டர் கல்வி

Diploma in Computer Programming

BASIC

4 Months - -Weekdays

Practicals on World famous Commodore Computers

Fees: மாதம் 250/- மட்டுமே!

பெறுபதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்:- 28 - 12 - 88

C. I. M. A. I. D. P. M. I. A. B
வகுப்புகளும் நடைபெறுகின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)

16, 3 ஆம் குறுக்கு வீதி,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

(C/939)

முதலாம் ஆண்டு நிறைவுதின அஞ்சலி

திருமதி தையல்முத்து சின்னையா

பிறப்பு:- 15- 11- 1910
இறப்பு:- 1 12- 1987

திதி:- 19- 11- 1988

நீங்கள் எம்முடன் அன்பாகவும், பண்பாகவும், இதம் பதமாகவும் பழகிக்கொண்ட முறை என்றென்றும் எங்கள் உள்ளத்தில் பசுமையாகவே நிலைகொண்டிருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மகன் மகள்,
மருமகன், உறவினர்கள்.

(7955)

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

நூலக உத்தியோகத்தர் தேவை

தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பாண்டித்தியமும் நூலகசேவை அனுபவமுமுள்ள 25 வயதிற்கு மேற்பட்ட பெண் உத்தியோகத்தர் தேவை

விண்ணப்பதாரர்கள் 31 12- 1988 இற்கு முன்பாக தமது விண்ணப்பங்களுடன் தேவஸ்தான அலுவலகத்தில் நேரில் சமுகம் தரவும்.

தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை.

(8292)

மீண்டும் வழமைபோல் விற்பனைக்கு உண்டு!!

Keels Products

Mutton Beef. Chicken, Pork Sausages Bacon, Meat Balls etc.....

Carnival Ice Cream
('காணிவல்' ஐஸ்கிறீம்)

பமிலி புளக் (Family Block), கப்ஸ் (Cups) பலவகையான சுவைகளில்

Andreiz Products

உடைத்த இறால், சிங்கறால், கணவாய், கணவாய்முட்டை, அறுகுளா பாரை மீன் etc.....

Eggs (முட்டை)

Broilers

புறொயிலர் கோழி இறைச்சி

விநியோகஸ்தர்:

மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி
224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு!
ஜெனரேட்டர் உதவியுடன் மின்சாரம் பெறப்படுவதால் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப் பட்டுள்ளது.

(C/943)

JAFFNA COLLEGE Institute of Technology

VADDUKODDAI

VACANCY

Applications are inivted from suitable qualified Candidates for the following post:

INSTRUCTOR –
(AUTOMOBILE TECHNOLOGY)

Qualification:-

Applicants should have N C.T. or N D.T or N. A B certificate in automobile trade or any other equivalent qualifications with experience in Auto trade. Teaching experience will be an added qualification

Salary:-

Negotiable depending on qualification and experience.

Apply with full Bio - data to the Director. Jaffna College Institute of Technology, Vaddu-coddai on or before 5 - 1 - 89.

- Director

(C/927)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்யாமொழி

குறள்:

பல நல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்
ஆகுதல் மாணார்க்கு அரிது.

பொருள்:

பல நல்ல நூல்களைக் கற்றுத் தேர்ந்த போதிலும், அவற்றின் நல்ல பயனாக நல்ல மனம் உடையவராகப் பழகுதல், (உள்ளன் பினால்) மாட்சியடையாதவர்க்கு இல்லை

உதயன்

உண்மை – விடுதலை – ஒருமிப்பு

இல: 292/ நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
18 - 12 - 88 த. பெ இல 33

நாளைய தேர்தல்

இலங்கை நாட்டிற்குப் புதிய ஜனாதிபதி ஒருவர் நாளை தெரிவு செய்யப்படவுள்ளார்.

மக்கள் ஆட்சியின் — சனநாயகத்தின் — சிறப்புமிக்க பிரதான அம்சம் வாக்குரிமையாகும். அந்த மகத்துவமான உரிமையைப் பயன்படுத்தி, மக்கள் தங்களுக்குப் பிடித்தமான ஒருவரைத் தமது ஆட்சித் தலைவராகத் தெரிவுசெய்யப் போகிறார்கள்.

நாளை நடப்பது இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல். இதற்கு முன்னர் 1982 இல் நடைபெற்றது. நிர்வாக அதிகாரம் முழுவதும் ஜனாதிபதி என்ற தனிமனிதவிடம் ஒப்படைக்கப்படும் புதியமுறை 1978 அரசமைப்பிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது.

உண்மையான சனநாயகம் என்றால் நிர்வாக அதிகாரம் மக்களிடம் — அவர்கள் பிரதிநிதிகளிடம் — பரவலாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். 1978 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்வாக அதிகாரம் முழுவதும் பதினைந்து இருபது பேர்களைக் கொண்ட மந்திரிசபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அது முற்றாக ஜனாதிபதிக்கு மாற்றப்பட்டு விட்டது.

அதன் காரணமாக மந்திரிசபையினரும், மக்கள் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதிக்கு துணை போகவர்களாக இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் சனநாயகத்தின் பெறுமானம் இலங்கையில் பெருமளவில் தேய்வு கண்டுள்ளது எனலாம்.

அதன் பெறுபேறாக, ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்தால், அவரோடு ஒத்தோடக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களையும் தெரிவுசெய்ய வேண்டிய தேவை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இல்லையேல் ஜனாதிபதி— நாடாளுமன்றப் பிணக்கு ஏற்படும் அபாயம் உண்டு.

எது எப்படியோ, நிர்ணயிக்கப்பட்டவாறு ஜனாதிபதி தேர்தல் நாளை நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா அறிவித்திருக்கிறார்.

சிங்களப் பிரதேசங்களில் வன்செயல்கள் மலிந்துள்ள போதிலும், மக்கள் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக்கப்படும் போதிலும், பலர் எதிர்பார்த்தது போல தேர்தல் நடத்தப்படப் இருக்கிறது.

அதன் காரணமாக போட்டியிடும் வேட்பாளர்களில் எவருக்கேனும், முதலாவது எண்ணிக்கையில் பெறுது, 51 சதவீத வாக்குகள் கிடைக்குமா என்பது சந்தேகமே என ஊகிக்கப்படுகிறது. வேட்பாளர்களுக்குக் கிடைக்கும் இரண்டாவது வாக்குகளையும் சேர்த்துத்தான் வெற்றி தோல்வி அறிய முடியும் என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

அனேகமாக, சிறுபான்மை இன மக்களான தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே ஒருவரின் வெற்றிக்குத் துணை செய்யும் என்றும் நம்பப்படுகிறது

அதனால் வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகிய பகுதிகளில் ஜனாதிபதி வேட்பாளர்கள் மூவரும் அக்கறையுடன் தேர்தல் பிரசாரம் செய்தனர்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் சிங்களத் தலைவர்கள் அள்ளி வீசும் தேர்தல் வாக்குறுதிகள் எப்படியானவை என்பதை நன்கு தெரிந்தவர்கள். அது மட்டுமன்றி நடைமுறைச் சாத்தியமான வாக்குறுதிகள் எவை என்பதையும் அவர்கள் இலகுவில் இனங் காணக்கூடியவர்கள்.

தங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களுக்கான காரண காரியங்களையும், அவற்றின் கர்த்தாக்களையும் தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

ஆகையால் தங்கள் வாக்குகளை என்ன செய்வது என்பதை அவர்கள் அனுபவபூர்வமாக, மதிநுட்பத்துடன் முடிவு செய்வர் என்று நம்பலாம்.

கற்குவாரிகிராமத்துக்கு றெட்பானா உதவி

மாங்குளம், டிச 18

மாங்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள மேற்கு கற்குவாரி கிராமக்களுக்கு முல்லைத்தீவு றெட்பானா நிறுவனத்தினரால் மாதம் முதல் கட்டமாக வழங்கும் திட்டம் ஒன்று அமுலாக்கப்படவுள்ளது.

இதற்கான குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் இக்கிராம வளர்ச்சிக்கு பாரிய அபிவிருத்தித் திட்டம் ஒன்றை றெட்பானா நிறுவனம் ஆரம்பிக்கவுள்ளது.

இங்கு மழை காலத்தில் போக்குவரத்துச் செய்வது கடினமாக இருப்பதால் ஒரு பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(ச-94)

இஸ்ரவேலில் மீண்டும் கூட்டணி அரசு

இஸ்ரவேலில் மீண்டும் தொழிற்கட்சியுடன் இணைந்த கூட்டு அரசு ஒன்றை அமைக்க லிகுட் கட்சி முன்வந்துள்ளது.

நடந்து முடிந்த தேர்தலில் எந்தஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

அப்போது பதவியில் இருந்ததனால்தொழிற் கட்சிக் கூட்டணிதான்.

இதுவரை இரண்டு கட்சிகளும் உதிரிக் கட்சிகளுடன் இணைந்து அரசு அமைக்க முயற்சித்தன. அவை தோல்வியில் முடியவே, பழைய கூட்டைப் புதுப்பிக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

புதிய கூட்டரசில் தொழிற்கட்சித் தலைவர் ஷிமோன் பெரஸுக்கு நிதி அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது.

தற்போதைய கூட்டரசில் அவர் வெளியுறவு அமைச்சராகஇருக்கிறார்.

பலஸ்தீனம் உருவாக அனுமதித்தால் இஸ்ரவேல் இறுதியில் அழிந்துவிடும்!

பிரதமர் ஷாமிர் அச்சம்

டெல் அவிவ் டிச. 17

பலஸ்தீனம் என்ற ஒரு நாடு இயங்க அனுமதிக்கப்பட்டால் அது இஸ்ரவேலை முற்றாக அழிப்பதில் தான் முடியும்.

இப்படி இஸ்ரவேல் பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் தெரிவித்தார்.

"ஆக்கிரமிக்கப்பட்ட காஸா, மேற்குக் கரை அரபுப் பிரதேசங்களில் பலஸ்தீன நாடு அமைக்கப்பட அனுமதிக்கப்பட வேண்டும். அது அரபு மக்களைத் திருப்திப்படுத்தும்"— இப்படி பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் 'ஜெருசலம் பேஸ்ற்' பத்திரிகைக்கு பேட்டி அளித்து இருந்தார்.

அது குறித்து கருத்து வெளியிடுகையிலேயே இஸ்ரவேல் பிரதமர் முன்கண்ட அச்சத்தை வெளியிட்டார்.

பிரதமர் ஷாமிர் மேலும் சொன்னதாவது:

"பலஸ்தீன நாடு அமைக்க இப்போது காஸா மேற்குக் கரைப் பிரதேசம் போதுமானது என்பார்கள் பிறகு கூடுதல் பிரதேசம் வேண்டும் என்று போராடுவார்கள்.

"இறுதியில் முழு இஸ்ரவேலையுமே பாலஸ்தீனியர் பிடித்துவிடுவார்கள்".

இப்படி பிரதமர் ஷாமிர் தெரிவித்தார்.

இதே வேளை ருனிஸியாவில் அமெரிக்கத் தூதர், பலஸ்தீன விடுதலை இயக்கப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசினார்.

பேச்சுக்கள் திருப்திகரமாக இருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

(எ)

கோழிமுட்டை பற்றிய பேச்சினால் பெண் அமைச்சர் பதவி இழந்தார்

லண்டன், டிச 17

முட்டை பற்றி கருத்துக் கூறப்போய் பிரிட்டிஷ் அமைச்சர் ஒருவர் பதவியையே ராஜினாமாச் செய்ய வேண்டியதாயிற்று.

அது மட்டுமல்ல, அவர் மீது கோழிப்பண்ணையாளர்கள் நீதி மன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளனர்.

பதவியை ராஜினாமாச் செய்தவர் சுகாதார அமைச்சரான திருமதி எட்வினா காறே. அவரை ராஜினாமாச் செய்த வைத்த முட்டை பற்றிய பின்னணி விவரங்கள் வருமாறு;

முட்டையில் சமனிலா பகரீறியாக் கிருமிகள் இருப்பதாகவும் இது சுகாதாரத்துக்கு ஊறு விளைவிக்கும் என்று திருமதி காறே இரண்டு வாரங்களுக்கு முன்னர் டெலிவிஷனில் தோன்றி தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து கோழிப்பண்ணையாளர் எதிர்ப்புத் தோன்றியது.

முட்டை விற்பனை மோசமாக வீழ்ச்சியடைந்தது.

கோழிப்பண்ணைகள் மூடப்படத் தொடங்கின.

அமைச்சரை ராஜினாமாச் செய்யும் படி அரசு, எதிர்க்கட்சி எம்பிக்கள் நிர்ப்பந்திக்க தொடங்கினர்.

ஆண்டு தோறும் 900 கோடி முட்டைகளை பிரிட்டிஷார் உண்ணுகின்றனர். அமைச்சரின் பேச்சினால் 40 கோடி முட்டைகள் சந்தையில் விற்கப்பட முடியாமல் தேங்கின.

தேக்க நிலையைச் சீராக்க 2 கோடி ரூபா செலவில் அரசு பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

முட்டையை நன்றாக வேக வைத்துச் சாப்பிட்டால் உடல் நலன் பாதிக்கப்படமாட்டாது என்று அரசு பிரசாரம் செய்தது.

எப்படி இருந்தும் அமைச்சர், பதவியை துறக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுக்கவே, நேற்று திருமதி எட்வினா காறே ராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

அமைச்சரின் பேச்சினால் பாதிக்கப்பட்ட கோழிப்பண்ணையாளருக்கு நட்டஈடு வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

நேரிடக்கூடிய முட்டைகளை ஒரு விலை கொடுத்து வாங்கவும் அரசு முன்வந்துள்ளது.

இதன் மத்தியில் பதவி விலகிய அமைச்சரிடமிருந்து நட்டஈடு கோரி கோழிப்பண்ணையாளர் வழக்குத் தொடர்ந்திருக்கின்றனர்.

4 ஆவது சர்வதேச இராமாயண மாநாடு

புதுடில்லி, டிச 17

நான்காவது உலக இராமாயண மாநாடும் மாதம் 20 ஆம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகிறது.

ஜனாதிபதி வெங்கட்ராமன் மாநாட்டைத் தொடக்கி வைக்கிறார்.

பிரிட்டன், கனடா, மொறிஷியஸ் உட்பட 18 நாடுகளைச் சேர்ந்த 100 க்கு அதிகமான கல்விமான்கள், எழுத்தாளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வர் என ராமாயண மாநாட்டுச் செயலாளர் லாலன் பிரசாத் வியாஸ் தெரிவித்தார்.

ராமபிரானின் செய்தியை உலக நாடுகளிடையே பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு மாநாடு நடத்தப்படுகிறது என்று அவர் மேலும் சொன்னார்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் உலகப்பிரதிநிதிகள் இறுதியில் அயோத்தியா, நந்திக்கிராமம், பிரயாகை, சித்ரகோட்டம் முதலிய தலங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவர். (எ)

உணவுத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நடவடிக்கை

மாங்குளம், டிச. 18

மாங்குளம் உணவுக் களஞ்சியத்திலிருந்து முல்லைத்தீவு, கிளிநொச்சி விஸ்வமடு, தணுக்காய், முத்தையன்கட்டு பரந்தன், பளம்காமம், நெடுங்கேணி ஆகிய இடங்களுக்கு அரிசியும் மாவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தற்போது மாங்குளம் உணவுக் களஞ்சியத்தில் மா, அரிசி, உணவுப் பொருள்கள் கையிருப்பில் இல்லை

மேற்படி சங்கங்களுக்கு அனுப்பப்பட்ட உணவுகள பத்து நாட்களுக்கே போதுமானதாகத் தெரிய வருகிறது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமற் பாதுகாத்துக்கொள்ள முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. பொன்னம்பலம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். (ச-94)

நத்தார் தின கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், டிச. 18

யாழ் செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியிலுள்ள இல்லா மண்டபத்தில் நத்தார் தினக் கொண்டாட்டத்தக்கு ஏற்பாடு செய்திருக்கிறது (ஒ)

ஆசிரியர்களுக்கான பண்டிகைக்கால முற்பணம் ரூபா 1,000

பாடசாலை ஆசிரியர்களின் கஷ்ட நிலமையைக் கருத்தில் கொண்டு ரூபா 1000 பண்டிகைக்கால முற்பணமாக வழங்க இலங்கை கல்விக் கூட்டுறவு இயக்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கையில் அதிகளவு ஆசிரியர்களையும் கல்விச் சேவை ஊழியர்களையும் உள்ளடக்கிய இலங்கைக் கல்விக் கூட்டுறவு இயக்கம் நாட்டின் நிலைமை கருதி சலுகடன் வழங்குதலையும் ரத்து செய்துள்ளது

இருப்பினும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு சம்பளமுற்பணம் வழங்கப்படவுள்ளது என இயக்கச்செயலாளர் அறிவித்துள்ளார்.

(சி-118)

கோயில் தொண்டோடு சமூக சேவையிலும் சாரணர் ஈடுபட வேணடும்

கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களங்களில் சாரணர்கள் அளப்பரிய தொண்டுகளை ஆற்றி வருகின்றனர். அவ்வாறான தொண்டுகளோடு சமூக சேவையிலும் சாரணர்கள் பங்குபற்றி மேலும் மேம்பாடடைய வேண்டும்.

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலூரி விரிவுரையாளர் நகுமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் சுன்னாகம் மயிலணி முருகமூர்த்தி ஆலய வளாகத்தில் நடைபெற்ற சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறினார்.

மயிலணி சைவ மகா வித்தியாலய சாரண ஆசிரியர் திரு. நவரத்தினம் தலைமையில் மயிலணி சைவ மகா வித்தியாலயம், ஏழாலை மகா வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த நாற்பதுக்கும் மேற்பட்ட சாரண மாணவர்கள் ஆலய வளவைச் சுத்தம் செய்யும் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

(ச - 27)

1988 ஆம் ஆண்டு ஜனவரி முதல்

அதிகரித்த மின்கட்டணத்தை யாழ். மாநகராளுமன்றம் வசூலிக்கும்

பருத்தித்துறை, டிச. 18

இலங்கை மின்சார சபை மின்சாரக் கட்டணங்களை 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் அதிகரித்திருப்பதையடுத்து, யாழ். மாநகராளுமன்றம் உள்ளூர் பாவனையாளர்களின் மின்சாரக் கட்டணங்களை அதிகரித்திருக்கிறது.

புதிய கட்டணங்கள் 1988 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் உள்ளூர் பாவனையாளரிடமிருந்து வசூலிக்கப்படும்

அதிகரிக்கப்பட்டிருக்கும் புதிய மின்கட்டண விபரங்கள் வருமாறு.—

வீட்டுப்பாவனை — ஒன்று முதல் பத்து அலகு (யூனிட்) வரை ஐம்பத்தைந்து சதத்திலிருந்து எழுபத்தைந்து சதமாகவும், பதினொன்று முதல் நாறு அலகு வரை ஒரு ரூபா ஐந்து சதத்திலிருந்து ஒரு ரூபா இருபத்தைந்து சதமாகவும், நாற்றி ஒன்று முதல் நானூற்றி ஐம்பது அலகு வரை இரண்டு ரூபாவிலிருந்து இரண்டு ரூபா இருபது சதமாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது

நானூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட அலகுக்கு வழக்கம்போல் ஒரு அலகுக்கு இரண்டு ரூபா ஐம்பது சதம் அறவிடப்படும்.

இதைத்தவிர பாவனையாளர் ஒவ்வொருவரும் மின்சாரத்தை உபயோகித்தாலும் உபயோகிக்காவிட்டாலும் மாதந்தம் ஐந்து ரூபாவை கட்டணமாகச் செலுத்தவும் வேண்டும்

கைத்தொழில் துறையினருக்கான கட்டண அதிகரிப்பு விபரம் வருமாறு:-

ஒன்று முதல் ஐந்து கேவிஏ (KVA) வரை இருபது ரூபாவிலிருந்து முப்பது ரூபாவாகவும் பதினொன்று முதல் ஐம்பது கேவிஏ வரை நாறு ரூபாவிலிருந்து இருநூறு ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

இவர்களுக்கான அலகுக் கட்டணம் அலகு ஒன்று ஒரு ரூபா அறுபது சதத்திலிருந்து இரண்டு ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி கேவிஏ கட்டணத்துடன் சேர்த்து இந்த அலகுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்

ஆறு முதல் பத்து கேவிஏ வரை கட்டண அதிகரிப்பு இல்லை, வழமைபோல் அதற்கு பழைய கட்டணத் தொகையான ஐம்பது ரூபா அறவிடப்படும்.

கைத்தொழில் துறையினருக்கான நிலையான கட்டணம் இருநூறு ரூபாவிலிருந்து முந்நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஹோட்டல்களுக்கான மின்கட்டண அதிகரிப்பு வருமாறு:-

ஒரு அலகு ஒரு ரூபா தொன்னூற்றி ஐந்து சதத்திலிருந்து இரண்டு ரூபா இருபத்தைந்து சதமாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது

இவர்களுக்கான நிலையான கட்டணம் இருநூறு ரூபாவிலிருந்து முந்நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் அக்டோபர் மாதகாலப் பகுதிக்கான இந்தப் புதிய கட்டணங்களுக்கான நிலுவைத் தொகைகள் பாவனையாளர்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

பாவனையாளர்களுக்கு கடந்த அக்டோபர் மாதம் முதல் அனுப்பப்படும் மின்சார கட்டணங்களுக்கான கட்டணங்கள் (Bills) புதிய கட்டணங்களின் அடிப்படையிலேயே தயாரித்து அனுப்பப்படுகின்றன.

(ஒ-ஐ 19)

இலக்கியப் பேரவையின் பரிசளிப்பு விழா வியாழனன்று

யாழ்ப்பாணம், டிச. 18

இலங்கை இலக்கியப் பேரவையின் 1985 – 86 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா 22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கலைகலாசாலை அரங்கில் நடைபெறும்.

யாழ் இலக்கிய வட்டத் தலைவர் செம்பியன் செல்வன் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

தொடக்கவுரையை பேராசிரியர் நா. பாலகிஷ்ணன் நிகழ்த்துவார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி நா. சுப்பிரமணியன், கூப்பு பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, மயிலங்கூடல நடராசன், திரு சோ. பத்மநாதன் ஆகியோர் சிறப்புரை வழங்குவார்கள்.

யாழ் பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை பரிசளிப்புரை வழங்குவார்.

பிரவேசவோர் தமக்குரிய பரிசில்களைப் பெறுவார்கள்;

திரு சி. வன்னியகுலம் (இலக்கிய ஆய்வு), அதிபர் "சொக்கன்" (நாவல்), திரு அ. செ. முருகானந்தன் (சிறுகதைத் தொகுதி, கவிஞர் கல்வயல் வே. குமாரசாமி (கவிதைத் தொகுதி), கவிஞர் காரை செ. சுந்தரம் பிள்ளை புலவர்மணி, புரவதிநாதசிவம்(காவியம்) திரு முருகையன் (நாடகம்). கவிஞர் பா. சத்திதாசன் (சிறுவர் இலக்கியம்

பிரசுரம் நூல்கள் இலக்கிய பேரவையின் சான்றிதழ்களைப் பெறுகின்றன.

இலக்கிய ஆய்வுப்பேராசிரியர் சண்முகதாஸ், திருமதி சண்முகதாஸ் எழுதிய "இந்திரஜித்தான்",

சிறுகதைத் தொகுதிகள்—அந்திய விருந்தாளி (க. பாலசுந்தரம்), மருதூர்க் கொத்தன் கதைகள் (மருதூர்க் கொத்தன்), ஆதுதி (சோமகாந்தன்). (ச)

நியமனக் கடிதம் சிங்களத்தில்

மட்டக்களப்பு, டிச .18

கல்விச்சேவை ஆணைக்குழுவினால் அண்மையில் புதிய நியமனம் பெற்ற ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதம் தனிச் சிங்களத்தில் வழங்கப்பட்டுள்ளது.

நியமனம் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகள், அறிவுறுத்தல்கள் அக் கடிதத்தில் இடம்பெற்றுள்ளன.

தமிழ் மொழி மூலம் ஆசிரியர் நியமனம் பெற்றவர்கள் மொழி புரியாமல் திண்டாடுகின்றனர்.

(ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுரம் ✶ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக் கொள்ள
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

உதயன்
18 12 1988 ஞாயிற்றுக்கிழமை

சேட்டிங் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

அக்டோபர் அசர்பாவிதங்களில் பலியான
யாழ்.போதனா வைத்தியசாலை
ஊழியர்களுக்கு நஷ்டஈடு!

யாழ்ப்பாணம், டிச 18

யாழ் போதனா வைத்தியசாலையில் கடந்த வருடம் அக்டோபர் மாதம் நடைபெற்ற அசம்பாவிதத்தின் போது மரணமடைந்த டாக்டர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்.

போதனா வைத்திய சாலைகள் அமைச்சு, யாழ் வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு இது குறித்து அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் போது யாழ். ஆஸ்பத்திரியில் கடமை புரிந்த டாக்டர்கள் உட்பட 11 பேர் கொல்லப்பட்டனர்

அவர்களுக்கான மாதாந்த சம்பளம் தொடர்ந்தும் வழங்கப்பட்டு வருகிறது

இதேவேளை மரணம் அடைந்த வைத்தியர்களுக்கு ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபாவும், ஏனையவர்களுக்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாவும் நஷ்டஈடாக வழங்கப்படும் என்று தெரியவருகிறது. (ஒ-10)

★ யாழ் மாவட்டத்தில்

வாக்களிக்கும் வாய்ப்பை
5 ஆயிரம் பேர் இழந்தனர்

யாழ்ப்பாணம், டிச 18

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை இழந்தனர்.

யாழ் செயலர் வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளன.

தேர்தலில் கடமை புரிவதற்கான தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் வாக்களிப்பதற்கான இறுதித் திகதி முடிவடைந்த பின்னரே இங்கு வந்து சேர்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-10)

யாழ். செயலகத்தில்

வாக்கு எண்ணும் பணி
இரவு 9 மணிக்கு ஆரம்பம்

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 9ஆம் திகதி இரவு 9 மணி முதல் வாக்குகளை எண்ணும் பணி தொடங்கும்

அதிகாலை 3 மணியளவில் யாழ் மாவட்ட வாக்களிப்பு முடிவுகளை அறிவிக்கக் கூடியதாக இருக்கும்

இவ்வாறு யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அந்தந்த வாக்களிப்பு நிலையங்களில் இருந்து வாக்குப் பெட்டிகள் யாழ் செயலகத்திற்குக் கொண்டு வருவதற்கு வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்கள் பயன்படுத்தப்படும்.

செயலகத்தில் வாக்குகளை எண்ணுவதற்காக விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்தேர்தல் மாவட்ட வாக்குக் கணிப்பீட்டு முடிவுகள் தொலைபேசி மூலம் தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்கப்படும் என்று அந்த வட்டாரங்கள் மேலும் தகவல் தந்தன. (ஒ 5)

வாக்குச் சாவடிக்கு ஒவ்வொருவர் விதம்

180 தமிழ்ப் பொலீஸார்
தேர்தல் கடமையில்!

180 தமிழ்ப் பொலீஸார் யாழ் மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் இந்திய அமைதிப்படையினருடன் கூட்டாகச் சேர்ந்து சீருடையில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவர்.

ஒவ்வொரு வாக்குச் சாவடிக்கும் தலா ஒவ்வொரு தமிழ்ப் பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

இதேவேளை சகல தமிழ்ப் பொலீஸாரும் இன்று யாழ்ப்பாணத்திலிருக்குச் சென்று தமது தேர்தல் கடமைகளை பொறுப்பெடுத்துக் கொள்வர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ 10)

தேர்தல் கடமையில்

சிங்கள,முஸ்லிம் பொலீஸார்
ஈடுபடமாட்டார்கள்

யாழ்ப்பாணம், டிச 18

ஜனாதிபதித் தேர்தலின்போது யாழ் மாவட்டத்தில் சிங்கள, முஸ்லிம் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள்.

மேலிடத்திலிருந்து கிடைத்த உத்தரவை அடுத்தே தேர்தல் கடமையில் இவர்களை ஈடுபடுத்தவில்லை எனப் பொலீஸ் வட்டாரங்கள் நேற்றுத்தகவல் தெரிவித்தன.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபடுவதற்கென திருகோணமலையிலிருந்து மேலும் 20 சிங்கள முஸ்லிம் பொலீஸார் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் அந்நடவடிக்கை இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ 10)

பதவி விலகும் ஜே.ஆருக்கு
கிடைக்கவிருக்கும் சலுகைகள்!

கொழும்பு, டிச 18

ஜனாதிபதிப் பதவியில் இருந்து விலகும் 83 வயதான திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அரசு வழங்கவிருக்கும் சலுகைகளின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ இல்லம் ஒன்று அவருக்கு வழங்கப்படும். அதற்கு வாடகை அறவிடப்படமாட்டாது

வீடு வழங்கப்படாதவிடத்து, முன்னாள் ஜனாதிபதி பெறும் பென்ஷன் பணத்தின் மூன்றில் ஒரு பங்கு மேலதிகமாக வழங்கப்படும்.

இப்படி ஜனாதிபதி உரிமைச் சட்டம் கூறுகிறது.

இதைவிட, ஜனாதிபதியின் அந்தரங்கச் செயலாளர் ஒருவர் பெறும் சம்பளம் முன்னாள் ஜனாதிபதிக்குச் செயலாளர் அலவன்ஸாக மாதாமாதம் வழங்கப்படும்.

ஓர் அமைச்சர் போன்று முன்னாள் ஜனாதிபதிக்கும் உத்தியோகரீதியான போக்குவரத்து வசதிகளும், மற்றும் சலுகைகளும் கிடைக்கும். (உ-எ)

ஜனாதிபதித் தேர்தலின் பின்
ஜே. ஆர். என்ன செய்வார்?

டிசம்பர் 20 ஆம் திகதிகுப் பிறகு ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனா என்ன செய்யப்போகிறார்?

தனது நினைவுகளை அவர் எழுதுவார். இதை அவரே தனது சகாக்களுக்கு கூறியிருக்கிறார்.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆய்வு நிலையம் ஒன்று நிறுவப்பட இருப்பது தெரிந்ததே.

இதற்கு அமைச்சரவை ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த நிலையத்தில் திரு. ஜே ஆர் ஜெயவர்த்தனா பணியாற்றுவார்.

நிலையம் அமையப் போகும் கட்டடத்தில் தற்சமயம் சீனத் தூதரகம் உள்ளது

விரைவில் தூதரகம் ஸ்ரீஜெயவர்த்தனாபுரவுக்குமிடம்மாற்றம்செய்யப்படவுள்ளது. (உ-எ)

3 தினங்களில் சேதம்

கொழும்பு, டிச 18

கடந்த மூன்று தினங்களில் 38 ட்ரான்ஸ்போமர்கள் தீவிரவாதிகளால் சேதப்படுத்தப்பட்டன.

இப்படி இலங்கை மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

மாவட்டரீதியில்

வாக்காளர் எண்ணிக்கை

கொழும்பு, டிசம்பர் 18

நாளைய ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை மாவட்டரீதியில் வருமாறு:

கொழும்பு — 10,88,640	யாழ்ப்பாணம் — 5,91,074
கம்பஹா — 9,69,734	வன்னி — 1,41,445
களுத்துறை — 5,70,194	மட்டக்களப்பு — 2,17,276
கண்டி — 6,28,373	திகாமடுல்ல — 2,65,951
மாத்தளை 2,14,939	திருகோணமலை — 1,52,289
நுவரெலியா — 2,29,510	குருநாகல் — 7,84,989
காலி — 5,71,109	புத்தளம் — 3,18,755
மாத்தறை — 4,51,926	அனுராதபுரம் — 3,34,063
அம்பாந்தோட்டை — 2,95,181	பதுளை — 3,29,464
	மொனறாகலை — 1,61,927
	இரத்தினபுரி — 4,57,225
	கேகாலை — 4,37,171

(ஒ எ)

குமாரின் கண்டனத்துக்கு ...,

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

ணமாக ஒவ்வொரு ஜனாதிபதி வேட்பாளரின் கோரிக்கையை அடுத்தும் இத்தகைய பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது

பாரபட்சம் இல்லை

இதுவரை சகல வேட்பாளருக்கும் பாரபட்சமற்ற முறையில் இப்பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது

திருமதி பண்டாரநாயக்காவின் யாழ் விஜயம் பற்றி எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளருடன் இந்தியத் தூதரகம் தொடர்பு கொண்டது.

அப்போது இலங்கை அரசின் கோரிக்கையின் பேரில் இந்திய இராணுவம் இந்த மேலதிக பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதையும் ஜனாதிபதி வேட்பாளர்கள் தங்கள் கூட்டங்களில் பாதுகாப்பு சூழ்நிலை சீர்குலையாமல் இருப்பதற்கு உறுதியளிப்பது விரும்பத்தக்கது என்றும் தூதரகம் தெரிவித்தது.

தாக்கிப் பேசுபவர்

திரு. குமார் பொன்னம்பலத்துக்கு இந்திய அமைதிப்படை பாதுகாப்பு வழங்கி வந்த நிலையிலும் கூட அவர் அமைதிப் படையைத் தாக்கிப் பேசி வருவதையும் தூதரகம் மேலும் தெரிவித்தது.

பொன்னம்பலத்தின் வருகையால் தேர்தல் கூட்ட பாதுகாப்பு ஏற்பாட்டில் குந்தகம் ஏற்படலாம் எனக் கருதப்பட்டது

கூட்டத்தைப் பாதுகாக்கும் படையினருக்கும் திரு. பொன்னம்பலத்தின் உரையைக் கேட்கும் ஜனக் கூட்டத்துக்கும் இடையே நெருக்கடி ஏற்படலாம் என்று அஞ்சப்பட்டது. இந்தியப் படையைத் தாக்கிப் பேசினால் இந்த நிலை ஏற்படலாம் எனக் கருதப்பட்டது

எனவே இதுபற்றித் திருமதி பண்டாரநாயக்காவிடம் தெரிவிக்கும்படி தூதர், எதிர்க்கட்சித் தலைவரின் செயலாளரைக் கேட்டுக்கொண்டார்.

தூதரகத்துக்குப் பொறுப்பில்லை

திருமதி பண்டாரநாயக்காவுடன் யார் யார் செல்வர் என்பதை அவரே இறுதியாக முடிவு செய்யவேண்டும் என்றும் தெளிவாகக் கூறப்பட்டது. இந்த அம்சத்தில் தூதரகம் எந்தப் பொறுப்பையும் வகிக்கவில்லை

ஜனாதிபதி வேட்பாளர்களிடமிருந்து எந்த இடத்தில் எப்போது தேர்தல் கூட்டங்களை நடத்தவிருக்கிறார் என்பதைப் பொறுத்தே பாதுகாப்பு ஏற்பாடுகள் அமையும்

ஒருதுழைப்பும் பாதுகாப்பும்

பேச்சாளர்கள் தங்கள் உரையின் மூலம் கூட்டத்தில் அநாகரீகமாக ஏறபடுத்தாமலிருக்கும் விஷயத்தில் அவர்களது ஒத்துழைப்பைப் பொறுத்த பாதுகாப்பு அமையும்.

திரு பொன்னம்பலம் இலங்கைப் பிரசை என்ற முறையில் பெற்றிருக்கும் உரிமையையும் அந்தஸ்தையும் பற்றித் தூதர் பிரச்சினை எழுப்பவில்லை.

ஆனால் அதே சமயம் இந்தியப் படையைத் தாக்கி வரும் திரு.குமார் பொன்னம்பலத்துக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்ய இந்தியத் தூதரகம் கட்டுப்பட்டிருக்கவும் இல்லை.

— இப்படி இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

மீளக்குடியமர்தல் நிவாரணம்
விடுதலையானோருக்கும் வழங்குக!

யாழ். அரச அதிபருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம் டிச 18

யுத்த மரிறும் தென்னிலங்கை தடுப்பு முகாம்களில் இருந்து விடுதலையானோருக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

தடுத்து விடுவிக்கப்பட்டோர் புனர்வாழ்வுக் கழக இணைத் தலைவர்யோ ஞானப்பிரகாசம் யாழ் அரச அதிபருக்கு இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்விடயம் சம்பந்தமாக அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் விபரிக்கப்பட்டுள்ளதாவது;-

அண்மைக் காலங்களில் சிறை மீண்ட நாம் சித்திரவதைகளினால் நோயாளிகளாகவும், காசோலை

யாழ்ப்பாணம் டிச 18

வட்டுக்கோட்டைப் பகுதியில் சண்டெடுக்கப்பட்ட ஆசிரியர் ஒருவருக்குரிய சம்பளக் காசோலை உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சியுடன், (அடையாள அட்டை சகிதம்) வந்து அதனைப் பெற்றுக்கொள்ளலாம் (அ)

நிவாரணக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம் டிச 18

நேற்று வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த நிவாரணக் கொடுப்பனவுகளை இன்று வழங்கப்படவேண்டிய நிவாரணக் கொடுப்பனவுகளுடன் சேர்த்து வங்கிகள் வழங்கும்

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக் கிளை, ஸ்ரான்லி வீதிக் கிளை, காங்கேசன்துறைக் கிளை ஆகியவற்றில் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (உ-5)

தொழில் எதுவும் செய்ய முடியாமல் உடல், உள, பொருளாதார ரீதியாக முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம்

புனர்வாழ்வுக்கென அரச நிவாரண நிதியாக வழங்கப்பட்ட 2 ஆயிரம் ரூபாவும் இதுவரை சரிவர விடுதலையான எமது சகோதரர்களுக்குக் கிடைக்கவில்லை.

அதே நேரம் இடம் பெயர்ந்தோர் நிவாரண நிதியும் சிறை மீண்டோருக்கு நிறுத்தப்பட்டுள்ளது. இது எமக்கு அதிர்ச்சியையும் மன வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

புனர்வாழ்வுக்கொடுப்பனவும் இடம் பெயர்ந்தோர் நிவாரணக் கொடுப்பனவும் தனித் தனியாகப் பிரத்தியேக மானவை இந்த இரண்டையும் தொடர்பு படுத்துவது எல்லா வகையிலும் பொருத்தமற்ற ஒன்றாகும் — இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ 5)

ஆலயத்தில் திருட்டு

மானிப்பாய் டிச 18

வண்ணார்பண்ணை சாந்தைப்பர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் கடந்த புதன்கிழமை இரவு திருடர்கள் புகுந்து பெறுமதி மிக்க வெள்ளி அங்கிகள், சுவர் மணிக்கூடு போன்றவற்றை திருடிச் சென்றுள்ளனர் (ஒ-9)

அமைதிப்படை கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச 18

நாளை நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொதுமக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என்று இந்திய அமைதிப்படை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அமைதிப்படை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி தேர்தல், பொதுமக்களுக்கு உள்ள உரிமையைப் பயன்படுத்த ஓர் அரிய வாய்ப்பு அச்சமின்றி வாக்குரிமையைப் பயன்படுத்துவதன் மூலம், ஜனநாயகம் அமைதி ஆகியவற்றில் தங்களுக்கு உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையையும், அமைதியின் அவசியத்தையும் வலியுறுத்த முடியும்—

அதன் மூலம் உங்கள் தீர்மானத்தையும், உயர்ந்த பண்பையும் எடுத்துக்காட்ட முடியும்.

இந்த அரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வாக்குரிமையில் உங்களுக்கு உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை எடுத்துக் காட்டுமாறு ஒரு வேண்டுகோளாக விடுக்கிறோம்.

ஏனைய பகுதிகளைச் சேர்ந்த உங்கள் தமிழ்ச் சகோதர சகோதரிகள் அப்பகுதிகளில் கடைப்பிடித்தது போல, தேர்தலில் அமைதியை நிலைநாட்டுங்கள்— இவ்வாறு அந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (உ)

அ' புரத்துக்கு அப்பால்
நேற்று மாலை திடீரென
கடைகள் மூடப்பட்டன

யாழ்ப்பாணம், டிச 18

அனுராதபுரத்துக்கு அப்பாற்பட்ட பிரதேசங்களில் நேற்று பிற்பகல் 2 மணிக்குப் பின் அதிகமான கடைகள் திடீரென மூடப்பட்டதாக அறியவருகிறது.

ஜே. வி. பி. தீவிரவாதிகள் விடுத்த அறிவிப்பை அடுத்தே கடைகள் மூடப்பட்டதாகக் கூறப்பட்டது.

எனினும் அப்பகுதிகளில் போக்குவரத்துக்கு எதுவித தடையும் விதிக்கப்படவில்லை. (ஒ-1)

பிலிப்பீன்ஸ்....

சிந்தாப்புரட்சி மூலம் மார்கோஸை பிலிப்பீன்ஸ் மக்கள் துரத்தி அடித்தனர்

இந்திய அமைதிப்படை இருப்பது இலங்கையின் இறைமையை நிச்சயமாகப் பாதிக்கிறது என்றுதான் சொல்வேன்.

-இப்படி திருமதி பண்டாரநாயக்கா பேட்டியில் தெரிவித்தார்.

யாழ். நகரம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யதாக இருந்தது.

நகருக்கு வந்த மக்கள் தமது கடமைகளை அவசர அவசரமாக முடித்து விட்டுச் சென்றுவிட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தனர்.

பஸ் சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

ஹர்த்தாலுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டதே இந்நிலைக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

இந்தியா வெற்றி

பரோடா, டிச 18

நியூஸிலாந்திற்கு எதிரான நான்காவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்திலும் இந்தியா வெற்றிபெற்றது.

இதன்மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் இந்தியா 4-0 என்ற கணக்கில் முன்னணியில் திகழ்கின்றது.

நேற்று பரோடாவில் நடைபெற்ற ஆட்டத்தில் நியூஸிலாந்து அணியை இரண்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணி பரபரப்பூட்டும் விதத்திலே தோல்வியடைத்தது

நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 278 ஓட்டங்களை எடுத்தது (ஒ-எ)

இரட்டை இலைச்சின்னத்தை
அ. தி. மு. க. அணிகள்
கோட்டை விட்டன!

புதுடில்லி, டிச. 18

அ. தி மு கவின் எந்த அணிக்கும் இரட்டை இலைச் சின்னம் வழங்கப்படமாட்டாது. என்று இந்திய தேர்தல் ஆணையாளர் பெரிசாஸ்திரி நேற்று அறிவித்தார்.

எம். ஜி ஆரின் மறைவைத் தொடர்ந்து அ. தி மு. க. பிளவுபட்டது.

அதைத் தொடர்ந்து ஜானகி அணியும் ஜெயலலிதா அணியும் தங்களுக்கு இரட்டை இலைச் சின்னம் வழங்கப்படவேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பித்திருந்தன.

இம்மனுக்களை விசாரணை செய்த தேர்தல் ஆணையாளர், இரட்டை இலைச் சின்னம் வழங்கும் விஷயத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்து இருப்பதாக அறிவித்தார்.

இரண்டு அணிகளையும் தேர்தல் ஆணையாளர் மாநில அரசியல் கட்சிகளாக அங்கீகரித்திருக்கிறார். (உ-எ)

இடப்பதிரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷனஸ் (பிறைவேட்) லிமிடெட் — வதிவிடமாகிய யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/2 இலக்கத்தில உள்ள அவர்களது அச்சகத்தில் 18 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 293/2 Navalar Road Jaffna. on Sunday 18th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org